பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை – 28

எண். 15830/எஸ்1/2024 நாள் 24.05.2024

பொருள் தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள் 1982 – உரிமங்கள் புதுப்பித்தல் மற்றும் உரிமங்களின் நகல் அளித்தல் தொடர்பான – அறிவுறுத்தல்கள் அனுப்புதல் – சார்பு

பார்வை தமிழ்நாடு பத்திரம்–நகல் எழுதுவோர் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனு நாள். 16.04.2024, 09.05.2024

தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிம விதிகள் 1982ன் விதி 13ன்படி ஆவண எழுத்தர்களால் உரிமம் புதுப்பித்தலுக்கான கட்டணம் செலுத்தி, உரிய படிவத்தில் மனு அளிக்கப்பட்டிருந்தும் பல உரிமம் வழங்கும் அதிகாரிகளான மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் துணைப்பதிவுத்துறை தலைவர்களால் தணிக்கை குறிப்பில் குறிப்பிடப்படும் இழப்பு குறிப்பு நிலுவை காரணமாகவும், காவல்துறையில் முதல் தகவல் அறிக்கையில் ஆவண எழுத்தர்களின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது போன்ற காரணங்களுக்காகவும் உரிமம் புதுப்பித்தளிக்கப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் உரிமம் சேதமான நிலையில் நகல் உரிமம் கோரி பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலித்து நகல் உரிமம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகவும் பதிவுத்துறை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிம விதிகள் 1982ன்பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள் 1982ன் விதி 13ன்படி ஆவண எழுத்தர் உரிமங்களை புதுப்பித்தளிக்க எவ்வித காரணமும் இன்றி தாமதமாக அளிக்கப்படும் விண்ணப்பங்களை நிராகரிக்கவே வழிவகையுள்ளது. விண்ணப்பங்களை எக்காரணத்திற்காகவும் நிலுவையில் வைத்திட வழிவகையில்லை. எனவே விதிகளுக்குட்பட்டு உரிமங்களை புதுப்பித்தளிக்கக்கோரி பெறப்படும் விண்ணப்பங்களின் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுத்திட மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் துணைப்பதிவுத்துறை தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

Verified RealEstate

சேதமான அல்லது கிழிந்து போன அல்லது கையாள இயலாத நிலையில் உள்ள உரிமங்களைப் பொறுத்து, நகல் உரிமம் கோரி பெறப்படும் விண்ணப்பங்களை விதி 13(e)ல் தெரிவிக்கப்பட்டவாறு உரிய கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் நகல் உரிமங்களை தாமதமின்றி வழங்கிடவும் அறிவுறுத்தப்படுகிறது. தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள் 1982ன் கீழ் செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களுக்கும் ஒரே கணக்குத்தலைப்பு மட்டுமே உள்ள நிலையில், நகல் உரிமங்களுக்கான கட்டணத்தையும் ஏற்கனவே STAR 2.0 மூலம் இணைய வழியே செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என தங்களது மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஆவண எழுத்தர்களுக்கும் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆவண எழுத்தர் உரிமம் புதுப்பித்தலுக்கான நடைமுறையில் தாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/24.05.2024
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணையின்படி/

27/5/24

பதிவுத்துறைத் தலைவருக்காக

27/5/2024

4/5

பெறுநர்
அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்/
மாவட்டப்பதிவாளர்கள்

நகல்: 1. முக்கிய ஆணைக்கோப்பு/சிஎஸ் பிரிவு
2. மாநில தலைவர்
தமிழ்நாடு பத்திரம் – நகல் எழுதுவோர் சங்கம்
234 குமரன் சாலை, திருப்பூர் – 641 601

Verified RealEstate